தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-12-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உலக மண் தினம்-2018
## "மண் - முடிவில்லா வாழ்வின் ஆதாரம்"

உலகம் முழுவதும், உலக மண் தினமானது மண்ணின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 5ம் நாள் கொண்டாடப்படுகிறது. இயற்கை அமைப்பில் மண் என்பது உணவு, நீர் மற்றும் ஆற்றல் போன்றவற்றை ஒருங்கிணைப்பதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. மேலும் இழந்து வரும் உயிரின வேறுபாடுகளையும், பருவநிலை மாற்றத்தை சீர்படுத்தும் காரணியாகவும் மண் செயல்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேம்பாட்டு இயக்ககத்தில் உள்ள மண்ணியில் மற்றும் வேளாண் வேதியியல் துறையில், இன்று 5-12-2018 உலக மண் தினம் கொண்டாடப்பட்டது. மதுரை தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முன்னாள் முதல்வர் முனைவர். கே.கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் "மண்-முடிவில்லா வாழ்வின் ஆதாரம்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் இயக்குநர் முனைவர். ஜவகர் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். அவரது உரையில் சிறப்பு விருந்தினர் முதல்வர் முனைவர். கே.கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மண்ணியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்பைப் பற்றி கூறியதோடு, உலக மண் தின விழா கொண்டாடுவதின் முக்கியத்துவத்தையும் சீர்கேடு அடைந்துவரும் மண் வளம் பற்றியும் விளக்கி கூறினார். மேலும்,

ஆராய்ச்சியாளர்கள், விழாவிற்கு வந்திருந்த ஓய்வுப்பெற்ற மண்ணியல் விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களையும் வரவேற்றுப் பேசினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் என்.குமார் அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை தாங்கினார். அவரது தலைமை உரையில், மண் வளத்தைப் பாதுகாப்பதில் மண்ணியல் ஆராய்ச்சியாளர்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது என்று எடுத்துரைத்தார். மேலும் இயற்கை, வேளாண் மண் அறிவியல், விவசாயிகளை முன்னிலைப்படுத்தி அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தமது உரையில் மண்ணின் முக்கியத்துவத்தையும் அதை சிறப்பான முறையில் பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தையும் எடுத்துரைத்தார். மேலும், இப்பொழுதுள்ள சூழ்நிலையில் மண் பல்வேறு இயற்பியல் மற்றும் பௌதீக சீர்கேடுகளுக்கு உட்படுகிறது என்றார். இவற்றிலிருந்து மண்ணை பாதுகாக்க பல்வேறு துறை வல்லுனர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றுரைத்தார்.

விழாவின் சிறப்பு விருந்தினர் முனைவர். கே.கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ‘‘மண்-முடிவில்லா வாழ்வின் ஆதாரம்’’ என்ற தலைப்பில் உரையாற்றினார் அவர். தனது உரையில் மண்ணின் மகத்துவத்தையும், அது எவ்வகையில் மனித உயிருடன் ஒத்துள்ளது என்பதையும் உதாரணங்களுடன் விளக்கினார். மேலும், மண்ணின் பல்வகையான பௌதீக மற்றும் இயற்பியல் குணங்களையும் அதன் பயன்பாடுகளையும் எடுத்துரைத்தார். மேலும், மண்ணை சரியான முறையில் பாதுகாத்து அடுத்த தலைமுறையிடம் ஒப்படைப்பது ஒவ்வொருவரின் கடமையும் என்று கூறினார்.

ஒரு அங்குள மண் உருவாக பத்து இலட்சம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆகும். ஆனால் அதனை தரம் குறைக்க சில ஆண்டுகளே போதும். எனவே நீடித்த நிலையான மண் வளத்தை சரியான முறையில் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமை என்றும் கூறினார்.

இறுதியாக மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் இந்திய மண்ணியல் கழகத்தின் கோவை பிரிவின் தலைவருமான முனைவர் அர.சாந்தி அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்